வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4629/ஆ4/2023 நாள்: 08.11.2023

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு ஊரகப்பகுதி திறனாய்வுத் தேர்வு(TRUST EXAMINATION ) –2023–2024 ஆம் ஆண்டு –16.12.2023 தேர்வுகள் –விண்ணப்பங்கள் பதிவிறக்கம் மற்றும் பதிவேற்றம் செய்தல்– அறிவுரைகள் வழங்குதல் –சார்பு

பார்வை : 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017888/ டி4 /2023 நாள் 07.11.2023
2. அரசாணை நிலை எண். 960 கல்வித்துறை (இ2 ) நாள் .11.10.1991
3. அரசாணை நிலை எண்.256 கல்வித்துறை (இ2 ) நாள் .22.12.2008

===============

அரசுத் தேர்வுத்துறையால் ஆண்டுதோறும் தமிழ்நாடு ஊராகப்பகுதி மாணவர்களுக்கான ஊரகத் திறனாய்வுத்தேர்வு " பார்வையில் கண்ட அரசாணையின் படி நடைபெற்று வருகிறது .

இத்தேர்வில் ஊராகப்பகுதியில் அதாவது கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2023–2024 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்கள் இத்திறனாய்வுத் தேர்வு எழுத தகுதிபடைத்தவராவார்கள்.

(குறிப்பு: நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்)

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு ( ரூபாய் ஒரு லட்சத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும் .

16.12.2023 (சனிக்கிழமை)அன்று நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேரவிற்க்கான வெற்று விண்ணப்பங்களை 14.11.2023 முதல் 24.11.2023 வரை www.dge.tn.gov.in என்ற அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளம் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து, அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட வெற்று விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கி பூர்த்தி செய்து விண்ணப்பத்துடன் வருவாய்ச் சான்றினையும் இணைத்து 24.11.2023க்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் .

ஊரகத் திறனாய்வுத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் தேர்வுக் கட்டணமாக ரூ.10/–னை பணமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் தலைமை ஆசிரியர்கள் இணைப்பில் கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி ONLINE–ல் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட அவ்விண்ணப்பங்களை பள்ளிக்கு வழங்கப்பட்ட,USER ID, PASSWORD மூலம் தலைமை ஆசிரியர் தேர்வர்களின்

அனைத்து விண்ணப்பங்களையும் 17.11.2023 முதல் 24.11.2023 வரை Online மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும் . மேற்படி தேதிக்கு பிறகு பதிவு செய்ய இயலாது என்பதால் தேர்வர்கள் பாதிக்கப்படா வண்ணம் 24.11.2023 க்குள் பதிவு செய்து இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தை செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது. பதிவேற்றம் முடிந்த பிறகு SUMMARY REPORT, பள்ளியில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் (தேர்வர்களின் விவரங்களுடன் ) வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 இருக்கைப் பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டும் என அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அறிவுரைகளை தவறாது பின்பற்றி தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறு வேலூர் மாவட்ட கல்வி அலுவலருக்கு(இடைநிலை) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. அரசாணை நிலை எண். 960 கல்வித்துறை (இ2 ) நாள் .11.10.1991
2. அரசாணை நிலை எண்.256 கல்வித்துறை (இ2 ) நாள் .22.12.2008
3. விண்ணப்ப படிவம்.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்:

அனைத்து ஊரகப் பகுதி அரசு , உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம் .

நகல்:
மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.